காங்கிரஸ் ஆதரவில் கொள்ளையர்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின் இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆனிமீ 16உ புதன் (30—6—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆனிமீ 17உ வியாழன் (1—7—54)	இதழ்: 14

"உரிமை காக்க 'இரணியன்' தோன்றியதுஇம்மாவட்டத்தில்தான்"

'ஆரியமாயை'த் தடையை மீறியதும் இங்குதான்!

'நாம்செய்த தியாகம் வீண்போகவில்லை'

சமூக சீர்திருத்த மாநாட்டில் ஏ.எல்.சி.கிருட்ணசாமி வரவேற்புரை

26—6—54-ல், வேலூரில் நடைபெற்ற வ. ஆ. மாவட்ட தி மு கழக 2-வது சமூக சீர்திருத்த மாநாட்டில், வரவேற்புக் குழுத் தலைவர் ஏ எல். சி. கிருட்ணசாமி அவர்கள், மாநாட்டிற்கு வந்திருந்தோரனைவரையும் வரவேற்றுப் பேசியதாவது :—

"அண்ணா அவர்களே! கழக முன்னணி வீரர்களே! பேரன்பு மிக்க பெரியோர்களே! மாநாட்டின் பிரதிநிதிகளே! தாய்மார்களே! சீர்திருத்தச் செம்மல்களே! உங்களனைவரையும் வருக, வருக என்று உளமார, மனமார சமூக சீர்திருத்த மாநாட்டின் வரவேற்பு குழுவினர் சார்பிலும், வ. ஆ. மாவட்ட தி மு க. சார்பிலும் வரவேற்கின்றேன்.

"கடந்த ஆண்டு உயர்த்தப்பட்ட போர்க்கொடி இந்த ஆண்டு வெற்றிக் கொடியாக காட்சியளிப்பது யாரால்? மாவீரர்கள் சிந்திய ரத்தத்தால் — வாழிழந்தோர், வாலிழந்தோர் — ஏன்— வாழ்விழந்தோர் வாங்கித் தந்த வெற்றிதான் என்றால் அது மிகையாகாது. தாயகத்திற்கு காமிழந்த கர்ம வீரர்களுக்கும், வண்டமிழ் நாட்டிற்காக வாழ்விழந்த தியாகிகளுக்கும் நாம் வெற்றிக் களிப்பில் கூடியிருக்கும் இந்த நேரத்தில் நம் வீர வணக்கத்தையும், வாழ்த்துதலையும் வித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம்.

"இதே ஆச்சாரியார் சென்னை முதலமைச்சராக இருந்த காலத்தில்தான், நாம், இதே வேலூரில் தமிழர் மாநாட்டை கூட்டியிருந்தோம்; அன்று சிலராக இருந்த நாம், இன்று பலராகக்கூடியிருக்கின்றோம்.

"முதன் முதலில் நம் மாவட்டம்தான் சமூக நீதிக்காகவும், எழுத்துரிமை, பேச்சுரிமைக்காகவும் இரு மாநாடுகளை திருப்பத்தூரில் நடத்தியிருக்கிறது அண்ணா தீட்டிய அருமைக் காவியம் 'ஆரிய மாயை'யை தடை மீறி, மக்கள் மத்தியில் படித்துக்காட்டி வெற்றி பெற்றிருக்கின்றது.

"'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற இணையில்லா நாடகத்திற்குத் தடை விதித்த போது, தடையை மீறி நடித்து, சிறை நண்ணி, தியாகத் தழும்பேற்றது நமது மாவட்டந்தான.

"நம் இதயத்தை குளிர்ந்திருந்த சித்தூரை, சிறுமதியாளர்கள் ஆந்திரதேசத்தில் சேர்த்துவிட்ட அநாத செய்கையைக் கண்டித்து, சித்தூர் போரை துவக்கியது நமது மாவட்டந்தான்.

"சமூக சீர்திருத்தமே நமது பேச்சாகவும், மூச்சாகவும் இருந்து வருகிறது—இது இன்று நேற்றல்ல; நம் இயக்கம் மலர்ந்த நாள் முதல் இன்று வரை சமூக சீர்திருத்தமே நம் இதய கீதமாக இருந்து வருகின்றது. நம்மைத் தவிர வேறு யார், எது செய்தாலும், பழித்துக் கூறுவதல்ல நம் நோக்கம் —நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கான திட்டம், எவருடையதாயினும், ஏற்றுப் போற்றுகின்றோம் —நல்லதை வரவேற்பது நல்லறிவாளரின் கடமை என்பதை நாம் உணர்ந்திருக்கிற காரணத்தால்!

"நம் அரசியல், பொருளியல் அனைத்தும் நம் சமுதாய நல்வாழ்வின் அடிப்படையிலிருந்தே பிறந்து வளர்ந்திருப்பதைக் காண்கின்றோம். நம் நாட்டு மக்களுக்கான வாழ்வுப் பாதையிலே எவை எவை தடைப்பட்டு குறுக்கிட்டாலும் உடனே அவைகள் நீக்கப்பட்டு, சோர்ந்து வீழ்ந்தவர்களையும் சிங்காரச் சோலைக் கழைத்துச் செல்வதுதான் நமது எண்ணம். அது மட்டுமல்ல; நம் நீண்ட நாள் தொண்டின் ஆவிக்கோர் ஒளியாக மென்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

"இப்படி பல ஆண்டுகளாக நாம் ஆற்றிய தொண்டினை மக்கள் மதித்தனர். அதுவரை மிகச் சிலராகவிருந்த நாமும், மிகப் பலராக வளர்ந்திருக்கின்றோம். அதோடு, மக்களிடத்திலே நம் கருத்தும் வளர்ந்துள்ளது. அலங்காரச் சோலையிலேயே பாடித் திரியும் சிங்காரச் சிட்டுகளாக, நாம் இருந்ததில்லை; சிறையிலடைத்தாலும், சிறகை ஒடித்தாலும் உயரப் பறப்பதையே குறிக்கோளாகக் கொண்ட வானம்பாடியாகவே நாம் நம் வழி பயணத்தைத் தொடங்கியுள்ளோம்.

"வயோதிகர்களும், வாலிபர்களும், வாழ்வில் சலித்தவர்களும் வாழ்வை இழந்தவர்களும், வாழ முடியாதவர்களும் இவர்களைக் கொண்டதுதான் நம் போர்ப்படை; ஆயினும் நாம் எத்தனை போராட்டங்களில் ஈடுபட்டாலும், மாற்றார் மலைக்கின்ற அளவுக்கு வெற்றி பெறுகின்றோம்; இனியும் பெறுவோம் என்பதில் ஐயமில்லை.

"எங்களுக்களித்த பணியைச் செய்தாகிவிட்டது. வெற்றிப் பட்டியல் இதோ! அடுத்த போர் எது? அதிலேயும் வெற்றி நிச்சயம். எதையும் தாங்கும் இதயமாக்கிக்கொண்டோம்— என்று பொதுச் செயலாளரை கேட்கவும், திட்டங்களை தீட்டவும் இம்மாநாட்டை கூட்டியிருக்கின்றோம்."

காங்கிரஸ் கட்சியினருக்குள் உள்ள வேற்றுமையின் எதிரொலி!

மான் சிங், லகான் சிங், அமிர்தலால் கோரத் திருவிளையாடல் துவக்கம்!

மத்திய பாரத், ராஜஸ்தான், உத்திரப் பிரதேச எல்லைப்புறங்களில் கொலையும்—கொள்ளையும்!

மத்திய பாரத் அரசாங்கத்திற்கும், பிந்து, மோரேனா பகுதி காங்கிரஸ் கட்சிக்கும் உட்பகை மூண்டு உள்ளது. அதைத் தீர்த்து வைப்பதற்காக ம. பா. பிரதேச காங்கிரஸ் குழு குவாலியரில் கூடியது.

அதே நேரத்தில் மான் சிங் என்ற கொள்ளைக்காரன், கொல்லப்பட்ட தனது தோழன் ஒருவனைக் காட்டிக் கொடுத்தவனைக் கொன்று, பழி தீர்த்துக் கொண்டான்.

ஆக்ரா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் சென்ற வாரத்தில் ஒரு போலீஸ் படையை, மான் சிங் தாக்கி, நால்வரைக் கொன்று, நால்வரைப் படுகாயப்படுத்தினான்.

மத்திய பாரத்தில் உள்ள மோரேனா மாவட்டத்தில், லகான் சிங் என்ற மற்றொரு கொள்ளைக்காரன், ஒரு போலீஸ் சிப்பாயையும், நான்கு சோதனைச்சாவடி சிப்பாந்திகளையும் கடத்திச் சென்றுவிட்டான். அவர்களில் இருவர், அடுத்த நாள் விடுவிக்கப்பட்டனர்.

சிவபுரி மாவட்டத்தில் உள்ள மாராயூரா எனும் இடத்தில், அமிர்தலால் என்ற வேறு ஒரு கொள்ளைக்காரன், மக்கள் கூட்டத்தின் மீது பாய்ந்து, ஆறு பேர்களைக் கொன்றதோடு, இருவருக்குக் காயத்தை உண்டாக்கினான்

காவலில் வைக்கப்பட்டிருக்கும் அமிர்தலாலின் மைத்துனனை மோதிராமை, போலீசுக்குக் காட்டிக் கொடுத்ததற்காகவே, மேற் குறிப்பிட்ட கொலைகள் செய்யப்பட்டன.

மேற்கூறிய கொள்ளைக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு முன்பாக, பிந்து, மோரேனா மாவட்டக் காங்கிரஸ் குழுவினரைக் கலந்து கொள்ள வேண்டுமென மத்திய பிரதேச சர்க்காருக்கு அறிவித்திருக்கிறது, தேச காங்கிரஸ் குழு!

காங்கிரஸ் கட்சியில் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களுக்கும், பதவியில் இல்லாதிருப்பவர்களுக்கும் ஏற்பட்டுள்ள பிணக்கின் எதிரொலியே, மேற்கூறிய சம்பவங்கள் என நம்பப்படுகிறது.

மூட நம்பிக்கை வளர பண்டிதரின் அறப்போர்!

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் அரசியல் கூத்து!

கும்பமேளா விசாரணையில் பிரமுகர் சாட்சியம்!

அலகாபாத், ஜூன் 28— கும்பமேளாவில், நெருக்கடி காரணமாக ஏற்பட்ட படுகொலைப் பற்றிய விசாரணையில் அலகாபாத் நகரசபையின் முன்னாள் தலைவர் பிஷாம்பர்நாத் பாண்டே சாட்சியம் கூறுகையில் கும்பமேளாவில் மக்கள் குளிப்பதற்காக ஆற்றின் முகப்புப் பிரதேசம் முழுமையும் திறந்து விட்டிருக்க வேண்டுமென்றும், சர்க்கார் அப்பிரதேசத்தில் மக்களின போக்குவரத்துக்கு இடையூறாக பல தடுப்புகளை ஏற்படுத்தியிருந்தனர் என்றும் கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் விசாரணைக் குழுவின் தலைவர் கமல் காந்த வர்மா, முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம் ஒன்றைக் கூறினார்.

அப்போது, கங்கையும், யமுனையும் சேருமிடம் மிகவும் குறுகலாகவும், கோட்டை ஒன்றின் அருகேயுமிருந்தது. அந்தப் பிரதேசம் மிகவும் குறுகலாக இருப்பதால் அங்கே மக்களை குளிக்க அனுமதிப்பது ஆபத்து என்று அப்போதிருந்த சர்க்கார் அந்தப் பிரதேசத்திற்குள் மக்கள் செல்லாது தடுத்தனர்.

உடனே பண்டித மதன் மோகன மாளவியா, ஜவகர்லால் நேரு போன்றவர்கள், சங்கமத்தில் குளிப்பது மக்கள் உரிமையென்றும், அதை சர்க்கார் தடுப்பது சரியல்ல என்றும் கூறி சத்தியாக்கிரகம் செய்தனர்.

தோழர் வர்மா இதைக் கூறி பிஷாம்பர் நாத் பாண்டேயை நோக்கி, 'பிரயாகைக்கு வருவோரின் நோக்கமெல்லாம் சங்கமத்தில் குளிப்பதுதானா?' என்று கேட்டார்.

உடனே தோழர் பாண்டே, பிரயாகைக்கு வருவோரின் நோக்கம் அதுதான் என்றும், ஆனால், 30 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கே நேரு செய்த சத்தியாக்கிரகம் பற்றித் தனக்கு சரியாக நினைவில்லை என்றும், அப்போது மத நம்பிக்கையினால் அல்லாது அரசியல் காரணத்திற்காகவே சத்தியாக்கிரகம் நடைபெற்றிருக்க வேண்டும் என்றும் கூறினார்.

அப்போது அன்னியர் ஆட்சியிருந்ததால், சத்தியாக்கிரகம் செய்த தலைவர்கள், இம்மாதிரி பிரச்சினைகளில் முடிவு செய்ய வேண்டியது அன்னியர்கள் அல்ல—அந்த நாட்டுக்கு உடையவர்களே என்பதை எடுத்துக்காட்ட, அவர்கள் சத்தியாக்கிரகம் செய்திருக்கலாம் என்றும் கூறினார்.

25,000 பேர் வேலை இழந்தனர்!

இரும்பு, மாங்கனீஸ் பொருள்கள் வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள வியாபார மந்தத்தின் காரணமாக ஒரிசாவில் 25,000 பேர் வேலை இழந்துவிட்டனர். ஒன்றரை கோடி மதிப்புள்ள இரும்பு மாங்கனீஸ் பொருள்கள் தேங்கிக் கிடக்கின்றன என்று தெரிகிறது.

நெய்வேலியில் உண்ணாநோன்பு

28—6—54 காலை 6 மணி முதல் நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் சங்க சார்பில், சுரங்கத்தில் வேலை பார்க்கும் டர்னர் ஷண்முகசுந்தரம் உண்ணா நோன்பு தொடங்கியிருக்கிறார்.

"சுமார் 3 மாத காலமாக வேலையிலிருந்து நீக்கிவைத்திருக்கும் தோழர் ஏ. வி. சபாபதியை திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்," உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் தரவேண்டும்; அநியாயமான குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறவேண்டும்; நிரந்தரமான வேலை; நிரந்தரமான சம்பளம்."

இந்தக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாய் அவர் அறிவித்துள்ளார். (ந. நி.)

இறக்குமதி கொள்கை

இந்த ஆண்டு ஜூலை முதல் டிசம்பர் வரை உள்ள காலத்திற்கான இந்திய சர்க்கார் இறக்குமதிக் கொள்கை அறிவிக்கப்பட்டிருக்கிறது. 60 பொருள்களின் இறக்குமதி கோட்டா அதிகரிக்கப்பட்டிருக்கிறது; இந்தியாவில் தயாராகும் 35 விதமான பொருள்களின் இறக்குமதி கோட்டா குறைக்கப்பட்டிருக்கிறது.

வதந்தியின் விபரீதம்!

பம்பாயில், குழந்தை பிடிப்பவர்கள் என்ற வதந்தி பரவி இரண்டு மனிதர்கள் கொல்லப்படும் அளவுக்கு மக்களிடையே பீதி பரவியது.

நம் நாடு

சென்னை 30-6-54 புதன்

குடியேற்றம் தேர்தல்

சென்னை சட்டசபைக்கு குடியேற்றம் இரட்டை உறுப்பினர் தொகுதியில், துணைத் தேர்தல் நடைபெற இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் சார்பில், சென்னை காங்கிரஸ் முதல் அமைச்சர் கனம் காமராசர் மேற்படி தொகுதியில் பொதுத் தொகுதி அபேட்சகராகப் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து கம்யூனிஸ்டு கட்சி சார்பில் ஒருவர் தேர்தலில் நிற்கிறார்.

ஏற்கனவே, பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படாது அமைச்சராகப் பதவி பெறுகிற ஒருவர், பதவி பெற்ற நாள் முதல் ஆறு திங்களுக்குள்ளாக, ஏதாவது ஒரு சட்டசபை தொகுதியில், தேர்தலில் நின்று சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது அரசியல் சட்டம். அந்த மக்களாட்சிப் பண்பை அலட்சியப்படுத்தி, மேல்சபை உறுப்பினராகத் தம்மை நியமனம் செய்துகொண்டு, மக்களாட்சிக் கொலைஞராகக்காட்சியளித்தவர் அன்பர் ஆச்சாரியார்.

தாமும் பொது மக்கள்பால் அச்சம் கொண்டு, தேர்தலில் கலந்து கொள்வதற்கும் பதிலாக, ஆச்சாரியார் வழியைப் பின்பற்றி விடுகிறாரோ கனம் காமராஜர் என நாம் எண்ணியதுண்டு. நமது எண்ணத்திற்கு மாறாக, அரசியல் சட்ட விதியை மதித்து, ஜனநாயகக் கோட்பாட்டை நிறைவேற்ற முன்வந்த கனம் காமராஜரை, மக்களாட்சி முறையைக் காப்பதில் கவலையுடைய அனைவரும் பாராட்டுவர் என்பதில் ஐயமில்லை.

இந்தத் துணைத் தேர்தலில் கனம் காமராசரை எதிர்த்து கம்யூனிஸ்டு கட்சி போட்டியிடுகிறது. இப்போட்டியில் யார் வெற்றி பெறுவர் என்பதில் ஆருடம் கூறவேண்டிய கவலையும், கடமையும் நமக்கு இருக்கவில்லை. அப்படிப்பட்ட கவலையுடையவர்கள், முன்னர் நடைபெற்ற தேர்தலில எவர் எவர் போட்டியிட்டனர், யார் யாருக்கு எத்தனை எத்தனை வாக்குகள் கிடைத்தன, எனவே இப்பொழுது அளிக்கப்படவிருக்கும் வாக்குகள் எவ்வாறு எவ்வாறு அளிக்கப்படலாம் எனக் கணக்கிட்டு, இப்பொழுதே வேண்டுமானாலும் பாராட்டுக் கூட்டம் நடத்த முன்வரட்டும்! அதை யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை! அதற்கான உரிமை அவர்களுக்குக் கிடையாது என வாதிடக் கிளம்புவாருமில்லை!

குடியேற்றம் தேர்தல் ஒரு துணைத் தேர்தலேயாகும். கனம் காமராஜர், அத்தேர்தலில் கலந்து கொள்வதின் காரணமாகத்தான், அதற்கு ஒரு அரசியல் முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறதே யல்லாது, வேறு குறிப்பிடத் தகுந்த காரணத்தினால் அல்லவே அல்ல. அத்தேர்தலில், கனம் காமராஜர் போட்டியிடாமல் இருந்திருந்தால், அதை மிக மிகச் சாதாரணத் தேர்தலாகவே கம்யூனிஸ்டு கட்சி உட்பட எல்லாக் கட்சியினரும் மதித்து இருப்பர். எனவே, காமராஜர் கலந்து கொண்டது, தேர்தலுக்கு ஒரு புதிய பவிசை உண்டாக்கிவிட்டு இருக்கிறது.

குடியேற்றம் துணைத் தேர்தலின் முடிவு எத்தகையதாக இருந்தபோதிலும், இந்த மாநில ஆட்சி, அதன் முடிவினால் லவலேசமும் மாறுதல் அடையப் போவதில்லை. கனம் காமராஜர் துணைத் தேர்தலில் வெற்றி பெற்றாலும், தோற்றுப் போனாலும், காங்கிரஸ் அமைச்சர் குழு மேலும் இரண்டு ஆண்டுக்கும் பதவியில் இருக்கப் போகிறது. கம்யூனிஸ்டு கட்சி அபேட்சகர் தேர்தலில் வெற்றி பெற்றுவிடுவதினால், நாளையே காங்கிரஸ் அமைச்சர் குழு அகற்றப்பட்டு, ஐ.மு. ஆட்சி ஏற்பட்டுவிடும் என்று கனவு காண்பதற்குக் கூட இருந்துவரும் நிலைமை இடந்தருவதாக இல்லை.

காங்கிரஸ் கட்சி இந்தத் துணைத் தேர்தலில் தோற்கடிக்கப்படுவதினால், காங்கிரஸ் அமைச்சர் குழுவின் போக்கை, வாக்காளர் பொதுமக்கள் ஒப்புக் கொள்ளாமல் எதிர்க்கிறார்கள் என்ற உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டதாகாதா என்னும் கேள்வி எழுவது இயல்பானதேயாகும். அப்படி எழும் இயல்பானக் கேள்வியில் சில பயங்கரமான உண்மைகளும் இருக்கத்தான் இருக்கின்றன. அதாவது, தஞ்சை பண்ணையாள் சட்டம், கடன் வசூல் ஒத்திவைப்பு சட்டம், குலதர்மக் கல்வி ஒழிப்பு ஆகிய இரண்டொரு நல்ல ஏற்பாடுகளையும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் செய்திருக்கிறார்கள். குடியேற்றம் தேர்தல் முடிவு காங்கிரசுக்கு எதிராக இருக்குமானால், மேற்கூறிய காங்கிரஸ் ஆட்சி செய்த நல்ல காரியங்களைக் கூட, வாக்காளர் ஒப்புக் கொள்ளாது எதிர்க்கிறார்கள் எனப் பொருள் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும். அவ்வாறு பொருள் கொள்வது நியாய விரோதமானதாகும். அது ஜனநாயக ஏற்பாட்டையே கேலி செய்வதாகவும் முடியும்.

கனம் காமராஜர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக பல ஆண்டு காலமாக இருந்து வந்திருக்கிறார். அவர், இந்த மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருந்து அன்பர் ஆச்சாரியாரை விரட்டி விட்டு, அவர் வீற்றிருந்த முதல் அமைச்சர் பதவியில், இடம் பெற்ற காலத்தும், காங்கிரஸ் கட்சியின் தலைவராகத்தான் இருந்தார்.

காமராஜர் விசித்திரமான ஒரு சூழ்நிலையில் இந்த மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறார் என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க நியாயமில்லை. என்ன அந்த விசித்திரமான சூழ்நிலை?

ஆச்சாரியார் முதல் அமைச்சராக பதவியிலிருந்த காலத்தில், குல தர்மக் கல்வி திட்டத்தை எதேச்சாதிகாரமாகக் கொண்டு வந்து திணித்தார். அடிப்படையில் முரண்பட்ட கோட்பாடுகளைக் கொண்ட எல்லா அரசியல் எதிர்க் கட்சிகளும், அக்குலதர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்தன. காலம் போகப் போக, துவக்கத்தில் சிறிதாக தோன்றிய எதிர்ப்பு, பேரெதிர்ப்பாக உருவெடுத்தது. பெரும்பாலான காங்கிரஸ் கட்சியினரும், கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில் எதிர்ப்பாளர் கண்ணோட்டத்தை, அப்படியே பெற்றுவிட்டனர். கல்வித் திட்டக் கோணத்திலிருந்து பார்க்கின்றபொழுது, அடிப்படை லட்சியங்களில் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டவர்களாக இருந்த பல்வேறு அரசியல் குழுவினரும், ஓரே அணியில் கூடியிருப்பது புலனாயிற்று. கல்வித் திட்டத்திற்கு உருவான அந்த எதிர்ப்பு ஒற்றுமை, அன்பர் ஆச்சாரியாரைப் பதவியிலிருந்து விரட்டுவதற்கு, ஒரு பலம் பொருந்திய ஆயுதமாகக் கனம் காமராஜருக்கு உதவி புரிந்தது.

எனவே, குலதர்மக் கல்வித் திட்ட ஒழிப்பையே புகலாகக் கொண்டு, ஆச்சாரியாரை ஒழித்துக் கட்டிவிட்டு, முதல மந்திரி பீடமேறினார் கனம் காமராஜர். அமைச்சர் குழுவை உருவாக்கியதும், குலதர்மக் கல்வித்திட்டத்தை குழி தோண்டிப் புதைத்ததைத்தான் தமது முதற் பணியாகச் செய்து முடித்தார் கனம் காமராஜர்.

குடியேற்றம் தேர்தலில் கனம் காமராஜர் தோல்வியுறுவதால், குலதர்மக் கல்வித் திட்டத்தை அவர் ஒழித்துக் கட்டியதை வாக்காளர் மக்கள் ஒப்பவில்லை என்று அன்பர் ஆச்சாரியார் திருக்கூட்டம், அறிக்கைமேல் அறிக்கை விடத்தான் போகிறது! ஏன், ஆச்சாரியாரே கூட, தேர்தல் முடிவை தனது திட்டத்திற்குச் சாதகமாக்கிக் கொள்ள டெல்லிக்குக் காவடி தூக்கினாலும் தூக்குவார்!

கம்யூனிஸ்டு கட்சி உள்பட, எல்லா எதிர்க்கட்சிகளுமே ஒழிய வேண்டுமென கோரிய புதிய கல்வித் திட்டத்தை, குடியேற்றம் தேர்தலில், ஒரு தேர்தல் பிரச்சினையாக வைத்து, கனம் காமராசர் தேர்தலில் போட்டியிடக் கிளம்பியிருந்தால், தேர்தலில் [illegible] கம்யூனிஸ்டு கட்சியும், மற்ற அரசியல் கட்சிகளும், அப்பொழுது என்ன செய்திருக்கும், தேர்தலில் எப்படி நடந்து கொண்டு இருக்கும் என்பது சிந்திக்கத் தக்கதாகும்.

ஆதலால் "குலதர்மக் கல்வித் திட்டம் கூடாது' என்பதற்காகவே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நான் தேர்தலில் நிற்கிறேன்; திட்டம் தொலைய வேண்டுமென்பவர்கள் எனக்கு வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்யுங்கள்; 'திட்டம் வேண்டும்' என்கிறவர்கள் என்னை எதிர்த்துப் போட்டியிடுபவருக்கு வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்யுங்கள்" என்று கனம் காமராஜர், இந்தத் துணைத் தேர்தலின் அடிப்படையையே வேறுமுகமாகத் திருப்பிவிட்டால், போட்டியிடும் கம்யூனிஸ்டு கட்சியும், குலதர்மக் கல்வித்திட்டத்தை ஒழிக்கத்தானே, — ஒழிக்க இருப்பவர் காங்கிரஸ் கட்சிக்காரராக இருந்தாலும் — தமது வாக்கைக் கொடுத்து உதவ வேண்டி இருக்கும்!

குலதர்மக் கல்வித் திட்டத்தைத் தொலைப்பதுதான் எமது நோக்கமும் என்று கம்யூனிஸ்டு கட்சி அபேட்சகர் தேர்தலில் கூறி, மக்கள் ஆதரவைப் பெற்று வெற்றி பெற்றாலும், அவரால் திட்டத்தைத் தொலைக்க ஒருக்காலும் முடியப் போவது கிடையாது. ஏனெனில், அவர் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இல்லை என்பது வெளிப்படை!

குடியேற்றம் தேர்தலில் வாக்காளர்களின் கருத்தெல்லாம், குலதர்மக் கல்வித் திட்டத்தின் மீது படிந்திருக்கும் என்பதில் ஆச்சரியமில்லை.

எனவே, குடியேற்றம் தேர்தல், விசித்திரமான சூழ்நிலையில் நடைபெறுகிறது என்பதோடு மட்டுமல்லாமல், வாக்காளர்களுக்கு ஒரு அறநெறி குழப்பத்தைத் தரும் உள்ளடக்கத்தைக் கொண்டதாகவுமிருக்கிறது.

உ. பி. சர்க்கார் கொடுமை!

எம். எல். ஏ.-க்கும் அவர் மனைவிக்கும் ஆறு மாத சிறை தண்டனை

வரி உயர்வை எதிர்த்தார்களாம்

எட்டாவா, ஜூலை 29— உத்திர பிரதேச சட்டசபை உறுப்பினரும், சோஷலிஸ்டு கட்சியினருமான அஜீந்திர சிங்கிற்கும், அவரது மனைவியாருக்கும் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையும், ரூ: 70 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஒரு மாத சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

உயர்த்தப்பட்ட விவசாய வரியைக் கொடுக்க வேண்டாமென்று மக்களைத் தூண்டினார்கள் என்று இவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டது. உத்திர பிரதேச சர்க்காரின் 'தனி அதிகார சட்டத்தின்' கீழ் இவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

எட்டாவா ஜில்லாவில் பிரஜா-சோஷலிஸ்டுகள், உ. பி. சர்க்கார் விதித்துள்ள விவசாய வரி உயர்வை எதிர்த்துக் கிளர்ச்சி செய்கின்றனர். இதுவரையில் இக்கிளர்ச்சியை ஒட்டி 42 பேர் தண்டிக்கப்பட்டனர் என்று தெரிகிறது.

மேட்டூர் அணைக்கு — சோழர்கள் திட்டமிட்டனர்

450 ஆண்டுகளுக்கு முன்னர் உருவான எண்ணம்

சோழர்கள் திறமை பற்றி சி. பி. இராமசாமி

"மேட்டூரில் அணை ஒன்று கட்ட வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது புதிதல்ல; நான் இத்திட்டத்தைப் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு முன்பே, 80 ஆண்டு காலம் சென்னை சர்க்கார் காரியதரிசிகளிடையே இப்பிரச்னை இருந்துவந்தது; அதைவிட முக்கியமானது, மேட்டூர் அணைக்கான திட்டங்களை 450 ஆண்டுகளுக்கு முன்னரே சோழர்களும், பல்லவர்களும் வகுத்தனர் என்பது,"

—என்று, சி. பி. ராமசாமி ஐயர் 'உட்லண்ட்'ஸில் நடைபெற்ற காசி எஞ்சினியர்கள் கழக ஆண்டு விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

"என்னுடைய ஆராய்ச்சிகள் மூலம் சோழ மன்னர்கள் நாட்டிலே பல நல்ல நீர்ப்பாசனத் திட்டங்களை நிபுணர்களைக் கொண்டு கட்டுவித்தார்கள் என்றும், அந்த மன்னர்கள், இப்போது மேட்டூர் அணை கட்டப்பட்டிருக்கும் இடத்திலேயே அணை ஒன்றைக் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டிருந்தார்கள் என்றும் அறிந்து கொண்டேன்," என்று அவர் மேலும் கூறினார்.

மேற்கத்திய நாடுகளில் கன்னித் தமிழ்ச் சுவடிகள்!

தமிழ் அகராதி புத்தகங்கள் உள்ளன

இலங்கைப் பேராசிரியர் தரும் தகவல்கள்!

பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலுள்ள நூல் நிலையங்களிலும், தனிப்பட்ட பிரமுகர் சேகரிப்பாளரிடமும் அபூர்வமான தமிழ்ச் சுவடிகளும், அச்சடிக்கப்பட்ட புத்தகங்களும் காணப்படுவதாக இலங்கை பல்கலைக் கழக கல்வி இலாகா பேராசிரியர் டாக்டர் சேவியர் தனிநாயகம் கூறினார்.

தமிழ்ப் பிரிவுகள் உள்ள பல்கலைக் கழகங்களை ஒன்று சேர்த்து ஐரோப்பாவில காணப்படும் தமிழ்ச் சுவடிகளின் பட்டியலைத் தயாரிக்கவும், அவைகளைப் பரிசோதிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அவர் யோசனை கூறியுள்ளார்.

டாக்டர் தனிநாயகம், தூத்துக்குடியிலிருந்து வெளியாகும் 'தமிழ் கலாச்சாரம்' என்ற பத்திரிகையின் ஆசிரியராவார். அவர் ஐரோப்பாவில் மூன்று மாத காலம் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்திருக்கிறார்.

வாடிகன் நூல் நிலையத்திலும், லிஸ்பனிலும், தமிழில் எழுதப்பட்ட அகராதிகளும், புத்தகங்களும் காணப்படுகிறதாம். 16-ம் நூற்றாண்டில் தமிழில் எழுதப்பட்ட 660 பக்கங்கள் கொண்ட புத்தகமொன்றைக் கண்டதாக டாக்டர் தனிநாயகம் கூறினார்.

பாரிஸ் அருகில் உள்ள பான்டன்ப்ளூ நெப்போலியன் நூல் நிலையத்தில் கம்பராமாயண ஏட்டுச் சுவடி ஒன்று இருக்கிறதாக நம்பப்படுகிறது.

'கந்தழி' என்ற சொல் கடவுளான காதை!

—(:)—

பிறர் நிர்ப்பந்தத்தால் நாம் எதையும் ஏற்றதில்லை! பிறரையும் ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்தித்ததுமில்லை!!

ஷெல்லியைப் புகழும்போது கம்பனை இகழ்வதும், கம்பனைப் புகழும்போது ஷெல்லியை இகழ்வதும் நாம் அறியாத ஒன்று!

சமூக சீர்திருத்த மாநாட்டில் ஈழத்தடிகள்

26—6—54-ல், வேலூரில் நடைபெற்ற வடாற்காடு மாவட்ட தி. மு. கழக இரண்டாவது சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கி முன்னுரையாற்றுகையில், திரு ஈழத்தடிகள், சகலத்திலும் சமத்துவம் காணும் பொதுவுடைமைவாதி தனியுடைமை காணும் கேலிக்கூத்தை சுட்டிக் காட்டினர்; 'பகுத்தறிவு,' பொதுவாக எல்லோருக்கும் இருந்தபோதிலும், அதனைச் சீர்திருத்தம் எனும் துறைக்கு யாரையாக்கம் மலர் இன்னும் பயன்பட்டுக்கொண்டிருப்பதை எடுத்துக் காட்டினர்; அந்தப் பாதையைச் செப்பனிடும் பணியை மேற்கொண்டுள்ள தி. மு. கழகத்தினருக்கு ஏற்பட்டுவரும் கஷ்டங்களையும், தொல்லைகளையும் குறிப்பிட்டுக் கூறினர்; கடவுளும் மதமும்தான் மனிதனின் தன்னம்பிக்கையை மாய்த்துவிட்டதென்றனர்; மதநூல் கோட்பாடுகளை ஒப்புக்கொண்டு கடவுளை நம்ப என்று மனிதன் ஆரம்பித்தானே, அன்றே அவன் தன்னம்பிக்கையை இழந்துவிட்டான் என்று கூறிவிட்டு, "ஒருவன் மாடியில் வாழ்கிறான்; இன்னொருவன் தெருக்கோடியில் குடிசையில் வாழ்கிறான்—'ஏன் இந்த நிலை ஏற்பட்டது?' என்று எண்ணுகிற உரிமையை மதம், மனிதனுக்கு அளிக்கவில்லை," என்று குறிப்பிட்டார்.

[அவரது சொற்பொழிவின் இரு பகுதிகள் முந்திய இதழ்களில் வெளிவந்துள்ளன. மூன்றாவது பகுதி இதோ தரப்படுகிறது.]

"அவன் மாளிகையில்வாழ்வது பூர்வ புண்ணியவசம் என்றும், இவன் குடிசையில் வாழ்வது அவன் செய்த பாபத்தால ஏற்பட்டதென்றும் மதம் முடிவு கட்டி வைத்திருக்கிறது.

இந்த முடிவை மாற்றவோ, மறுக்கவோ உன்னால் முடியாது—அந்த உரிமை உனக்குக் கிடையாது—அது ஆண்டவனுடையது என்று கூறி, அறிவுக்கு—முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட்டிருக்கிறது இந்த மதம்.

எனவேதான் நாம், மதத்தையும், கடவுளையும் பற்றிப் பேச வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். கடவுளும் மதமும் நம்முடைய வாழ்வில் தலையிடவில்லை யென்றால், கடவுளையும் மதத்தையும் பற்றி பேச வேண்டிய நேரத்தை, வேறு நல்ல துறைகளுக்கு நாம் பயன்படுத்தியிருப்போம்; ஆனால், மனிதனின் தன்னம்பிக்கையைஇழக்கச் செய்த இந்தக் கடவுளும், மதமும் நாட்டில் இல்லாதொழியும் வரை நாம் இதைப் பற்றிப் பேசித்தான் ஆகவேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரை சேர - சோழ - பாண்டியர்கள் என்ற மூப்பெரும் அரசர்கள் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தார்கள். அவர்களைப்போல மதத்தைப் பாதுகாத்தவர்கள் வேறு யாரும் கிடையாது. கடவுளின் அருளைப் பெற்றுவிட்டால், கணக்கற்ற பெரும் பேறுகளைப் பெற்று வாழலாம் என்ற மதக் கோட்பாட்டினை நம்பிய காரணத்தால், அவர்கள், கண்ணை இமை காப்பதுபோல் கடவுளைக் காத்து வந்தார்கள். அதாவது, கணிப்பாறை, காட்டிலும் மேட்டிலும், குழியிலும் குட்டையிலும், புதரிலும் புற்றிலும் கிடந்த கற்சிலைகளுக்கு, கனத்த பொருட் செலவில் ஆலயங்களை எழுப்பி, அங்கே ஆண்டவனை எழுந்தருளப் பண்ணும் கும்பாபிஷேகத்தைச் செய்து, ஆண்டவனை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

உதாரணத்துக்கு ஒன்றை மட்டும் கூறுகிறேன்—இன்று மதுரையில் காணப்படும் மீனாட்சியம்மன் கோயில், குலசேகர பாண்டியன் என்ற மன்னன் காலத்தில், இப்போதுள்ள நிலையில் இருக்கவில்லை. குலசேகர பாண்டியனுக்கு இராசதானியாக இருந்த மணலூரிலே தனஞ்செயன் என்னும் ஒரு வியாபாரி இருந்தான். வியாபார நிமித்தமாக வெளியூர் சென்றிருந்த தனஞ்செயன், ஊருக்குத் திரும்பி வரும்பொழுது இருட்டிவிட்டபடியால், ஒரு காட்டுக்குள் தங்க வேண்டியதாயிற்று. தங்கியிருந்த சமயத்தில் அங்கொரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டான்.

பொழுது விடிந்ததும் மணலூருக்குச் சென்று அரசனிடம் இதைத் தெரிவித்தான். அன்றிரவு காட்டில் லிங்க வடிவில் இருந்ததாகச் சொல்லப்படும் சொக்கநாதக் கடவுள், பாண்டியனுடைய கனவில் தோன்றி, "நானிருக்கும் அந்தக் காட்டை வேரோடு களைந்து, அதை ஒரு நகரமாக்கி, எனக்கு ஒரு ஆலயம் கட்டித் தரக்கடவது" என்று கட்டளையிட்டு மறைந்துவிட்டாராம்.

ஆண்டவனின் கட்டளையைச் சிரமேற்கொண்ட குலசேகர பாண்டியன், சொக்கநாதருக்கு ஒரு ஆலயமும், மீனாட்சிக்கு ஒரு தனி ஆலயமும் எழுப்பி, அந்த இரு ஆலயங்களையும சுற்றி ஒரு பெரு நகரத்தையும் உண்டாக்கி, அந்தக் கோயிலுக்கு பூசை செய்வதற்காக காசியிலிருந்து சில பிராமணர்களையும் வருவித்தானாம். அதன் பின்னர்தான அந்த இடம் மதுரை என்ற பெயர் பெற்றதாம்.

இப்படி ஒரு கதை மதுரையை பற்றியும், அங்குள்ள கோயிலைப் பற்றியும் கூறப்படுகிறது. இது போலவேதான் தமிழ் நாட்டில் கட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு கதை கூறப்படுகிறது!

அப்படிப்பட்ட அரும்பெரும் காரியத்தை அதிக பொருட் செலவில் செய்து வைத்த அந்த சேர, சோழ, பாண்டியர்கள் இப்பொழுது எங்கே? அந்த அரச பரம்பரைகள் அடியோடு அழியக் காரணம் என்ன?

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்று ஒரு பழமொழியும் மத உலகில் உலவுகிறது. ஆனால், இந்தப் பழமொழிக்கு முற்றிலும் மாறாக முடியுடை வேந்தர்களாக வாழ்ந்த அந்த மூப்பெரும் மன்னர்களும், அந்த ஆண்டவனுல் கைவிடப்பட்டுவிட்டனர்; அழித்தொழிக்கப்பட்டனர். ஏன்? தனக்குக் கோயில் கட்டி, தன்னைப் பாதுகாத்துத் தரணியாண்ட முடியுடை வேந்தர்களை-அவர்களின் பேரைக் கூறிக்கொண்டிருக்கக் கூட ஒரு ஆளை அந்தப் பரம்பரையில் விட்டு வைக்காத கடவுளை, நாமும் வணங்கவேண்டும் என்று சொல்லிக்கொள்வதற்கு இன்னும் சிலர் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்றால், அவர்களைப் பற்றியும் அந்தக் கடவுள்களைப் பற்றியும் உள்ள பித்தலாட்டப் புனைசுருட்டுகளை நாம் பேசித்தானே ஆகவேண்டும்? அதற்காகத்தானே இப்படிப்பட்ட சீர்திருத்த மாநாடுகளைக் கூட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்? இல்லையேல், மாற்றுக் கட்சிக்காரர்கள் கூறுவதுபோல, அரசியல் மாநாட்டினை நடத்துவதோடு மட்டும் நின்றுவிடுவோம்.

அரசியலிலும் வேண்டிய தேவைகள் நாட்டிற்குக் கிடைத்துவிட்டால், அரசியல் மாநாடு என்ற ஒன்றைக் கூட கூட்டும் அவசியத்தில் நாம் இருக்கமாட்டோம். காங்கிரஸ்காரர்களைப்போல, காங்கிரஸ் மகாசபையின் வேலை முடிந்தும் கூட, அந்த மகாசபையைக் கலைக்காமலிருக்கிறார்களே, அப்படி நாம் இருக்கமாட்டோம். குறிப்பிட்ட ஒரு நோக்கத்துக்காகத் துவக்கப்பட்ட அந்த வேலை முடிந்ததும், அதைப் பற்றியே சதா சர்வ காலம் பேசிக்கொண்டு காலத்தைக் கழிக்காமல், வேறு பயன்தரத்தக்க ஒரு நல்ல வேலையை ஆரம்பித்து, அதிலும் வெற்றி காண முயல்வதே அறிவுடைமையாகும்.

வேண்டுமானல், குறிப்பிட்ட ஒரு வேலையை நாம் செய்தோம்—அதற்காக அரும்பாடுபட்டோம்—அதற்கு இன்னின்னரின் உதவி கிடைத்தது—எல்லாம் கூடி நமக்கு வெற்றியை விரைவில் தேடித் தந்தது—என்பதை மட்டும் நாம் மறவாமல் இருக்கலாம்; மறக்கக்கூடாது; ஆனல் தொடங்கிய வேலை முடியவில்லையெனில், அது முடியும் வரை பாடுபட்டேயாக வேண்டும்.

சமூகத்தைத் திருத்தியமைக்கப் பாடுபடும் நாமும், தொடங்கப்பட்ட வேலை முடியாத நிலையிலேயே இன்னும் இருந்துகொண்டிருக்கிறோம்.

சமூகம் எதனால், ஏன் சீர்கெட்டுக் கிடக்கிறது என்பதை விளக்க முற்படும்பொழுது, அந்தச் சீர்கேட்டிற்குக் காரணமாய் எவையெவை இருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்த்து, அவைகளை மக்களின் சிந்தனைக்கு வைக்கிறோம். நாம் எந்தக் கருத்தினையும், 'இதனைத்தான் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்'—என்று கட்டாயப்படுத்தும் கருத்துடையவர்களல்ல; எவையெவை மக்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றனவோ, அவற்றைக் களைந்தாக வேண்டுமென்ற நமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறோமே ஒழிய, கல்லைக் காட்டி, 'இது தான் கடவுள்' என்று கூறும் மத வாதியைப் போல் மதியிழந்து, நாம் கூறும் எதனையும் மக்கள் நம்பியாகவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவதில்லை; அது ஒரு பகுத்தறிவுவாதிக்கு ஏற்ற வேலையுமல்ல; அப்படிச் செய்வது பகுத்தறிவு என்ற சொல்லையே கேலி செய்வது போலாக முடியும். ஒரு பகுத்தறிவு வாதி, யார் எதனை எப்படிச் சொன்னபோதிலும், அதனை அப்படியேஒப்புக்கொள்வதில்லை — ஒப்புக்கொள்ளக் கூடாது.

எது யாரால்கூறப்பட்டாலும், அதில் உண்மை இருக்கிறதா?—உலக இயல்புக்குப் பொருந்தி வருகிறதா—அதனால், மக்கள் முன்னேற்றத்திற்கு வழி ஏற்படுகிறதா — என்ற இவைகளைப் பகுத்து அறிந்து தெளிவு பெற்ற பின்னரே அந்த உண்மையை மற்றவர்களுக்கும் கூறி அதனை அவர்களும் ஒப்புக் கொள்கிறார்களா என்றும் பார்க்கவேண்டும். அந்த அளவுக்குப் பொறுமை இருந்தால்தான், ஒரு பகுத்தறிவுவாதி தன் இலட்சியத்தில் வெற்றி காண முடியும்.

முதன் முதலில், கடவுளைப் பற்றி நமக்கு அறிமுகப்படுத்தப் பட்டபொழுது, இன்று நாம் காணும் கடவுள், நம்முடைய கருத்திலும் பதியவில்லை; கண்ணிலும் புலப்படவில்லை அது வேறு விதமாக இருந்தது; பழம்பெருந் தமிழ் நூலான தொல்காப்பியத்தில் கடவுளை நமக்கு அறிமுகப்படுத்தும் ஒரு சொல் இருப்பதாகப் புலவர் பெருமக்கள் கூறினர்—அதன் பெயர், 'கந்தழி' என்பது இந்தக் 'கந்தழி' என்ற சொல்லின் பொருள், ஒரு பற்றுக்கோடுமின்றி, அருவாகி, தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் என்பதாகும்.

இந்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள ஒரு கடவுள் இருப்பதால், யாருக்கும் எந்தவிதமான தொல்லையும் ஏற்படாதென்றே எவரும் கருதுவர். இப்பொருளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கடவுளை, அக்காலத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருந்தாலும் அதில் தவறொன்றும் இருக்க முடியாது.

எதனிடத்தும் பற்றில்லாத ஒன்று— வடிவங்கள் எதுவுமில்லாத ஒன்று—பிறருடைய உதவியையோ துணையையோ நாடாத ஒன்று —தத்துவம் அனைத்தையும் கடந்த ஒன்று—கடவுளாகவோ அல்லது வேறு எதுவாகவேனுமோ இருக்கட்டும்—அதனால் நமக்கேற்படும் கேடேதுமில்லை, நன்மையோ ஒன்றுமே இருக்காதென்றே அக்காலத்தவர் கருதியிருப்பர். அதனாலேயே அந்தச் சொல்லும், மற்ற நூல்களைப் போல் கடவுள் வாழ்த்தோடு தொடங்கப்படாத தொல்காப்பியத்தில் இடம் பெற முடிந்தது.

ஆனால் 'கந்தழி' என்னும் இந்தச் சொல்லே, இன்றைய திராவிட மக்களின் வாழ்க்கையைச் சுட்டெரிக்கும் வெந்தழலாக மாறுமென்று அச்சொல்லை உண்டாக்கிய தொல்காப்பியனுர்கூட கனவிலும் நினைத்திருக்க மாட்டார். அந்தளவுக்கு இந்தக் 'கந்தழி' நம்மையெல்லாம் வாட்டி வதைக்க ஆரம்பித்துவிட்டது.

முதலில் யாதொன்றிலும் பற்றுதலின்றியிருந்த இந்தக் கந்தழி காலவட்டத்தில், இறைவனுகி, அதன் பின்னர் அழகு என்றும், சிவம் என்றுமாகி, இப்பொழுது கல்லாய்—செம்பாய்—கட்டையாய் மாறி, நம்மையெல்லாம் எந்தவுக் கீழ்நிலைக்குக் கொண்டுபோய் விட்டிருக்கிறது என்பதை எண்ணும்போதுதான், இனியும் இப்படிப்பட்ட ஒரு கடவுள் நமக்குத் தேவையா என்று சிந்திக்கத் தோன்றுகிறது. இந்தக் 'கந்தழி' என்ற ஒரு சொல்லை உண்டாக்கிய தொல்காப்பியர் இன்றிருந்தால், கட்டாயம் கண்ணீர் வடித்திருப்பார்!

அன்றைய கடவுள் நம்மிடமிருந்து எதனையும் எதிர்பார்க்கவில்லை; அது எந்தப் பொருளிடத்தும் பற்றுதலின்றாமலிருந்தது மட்டுமல்ல—யாதொரு வடிவத்தையும் கொண்டதாக இருந்ததில்லை :என்று மத நூலாரே கூறுகின்றனர். ஆனல், இன்றைய கடவுளுக்கோ, அளவுக்கு மீறிய பற்றுதலும் பாசமும் ஏற்பட்டிருக்கிறது. தன்னுல்படைக்கப்பட்ட உயிர்கள், குடிக்கக் கஞ்சிக்கும், உடுக்கத் துணிக்கும், இருக்கக் குடிசைக்கும் வழியில்லாமல் வாடியிருந்தாலும், தனக்கு இலட்சக்கணக்கான பொருட் செலவில் கட்டப்படும் ஆலயமும், பல கோடி பெறுமான ஆபரணங்களும், ஆறுகால உணவும் தேவையென்று கேட்கிறது—நிர்ப்பந்திக்கிறது — நிர்ப்பந்தித்துப் பெற்றுவிடுகிறதென்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

அதேபோது, அந்த கடவுளின் படைப்புகளில் பல் பஞ்சையாய் பராரியாய் பதைபதைத்துத் திரிவதையும் கண்கூடாகக் காண்கிறோம். காணும்போதுதான், இப்படிப்பட்ட ஒரு கடவுள் இன்னும் நாட்டில் இருக்கத்தான் வேண்டுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

எனவேதான், இப்படிப்பட்ட சமூகசீர்திருத்த மாநாடுகளிலே, அன்றைய கடவுளையும், இன்றைய கடவுளையும் ஒப்பிட்டுப்பார்த்து, கடவுள் பற்றிய நம்முடைய கருத்தை மற்றவர்களுக்கும் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இப்படிப்பட்ட சந்தேக விளக்கங்களை நாட்டு மக்களின் முன் கொண்டுவருவதற்கும் எங்களை நாத்திகர்கள் என்று நாணய மற்ற சிலர் சொல்கிறார்கள்—என்ற போதிலும், நாம், நம்முடைய வேலையைப் பாதியில் நிறுத்தாமல் தொடர்ந்து செய்துகொண்டே செல்கிறோம். வெற்றி நமக்குத்தான், அவர்களுக்கல்ல—எனும் அறிகுறிதான், நாம் கூறும் கருத்துக்களை ஆதரிக்கும் மக்களின் தொகை, வளர்ந்து கொண்டு வருவது.

இந்த வளர்ச்சி, மேலும் நமக்கு நல்ல உற்சாகத்தைத் தந்து, தொட்ட வேலை துப்புமையானது; அதனை விடாது தொடர்ந்து செய்—என்று கூறுவது போன்ற உணர்ச்சி வேகத்தை நமக்கு உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது. இந்த உண்மையை மாற்றவும் மறுக்க முடியாது; அந்த அளவுக்கு நாம் வளர்ந்து விட்டோம்.

இன்னும் ஒரு சிலர் இருக்கிறார்கள்—நம்மைப் பற்றிக் கேலி செய்பவர்கள் — அவர்கள்தான், நாம் நம்மை நாத்திகர்கள் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுபவர்கள் என்று பிரச்சாரம் செய்யும் இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகள்.

'பார்ப்பான்' என்ற சொல்லையே உச்சரிக்கும் துணிவற்ற துடை நடுங்கிகளாகிய இந்தக் கம்யூனிஸ்டுத் தோழர்கள், நம்மைப் பார்த்து கைபாண்டி செய்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

நாம், எப்பொழுது நம்மை நாத்திகர்கள் என்று கூறிக்கொண்டோம்? இன்று முதல் நம்மை நாத்திகர்கள் என்றே எல்லோரும் அழைக்கவேண்டும் என்று எப்போது யார்முன்னிலையில் பிரகடனம் செய்துகொண்டோம்? கம்யூனிஸ்டுத் தோழர்களால் இதனை விளக்க முடியுமா?

நாம், எப்பொழுதுமே நம்மை நாத்திகர்கள் என்று கூறிக்கொண்டதில்லை—இனியும் கூறிக்கொள்ளப் போவதில்லை.

நாம், நாட்டிலுள்ள நானுவித

(4-ம் பக்கம் பார்க்க)

உலக அரங்கில்

கொழும்பு :

தென் கிழக்கு ஆசியாவில் சமாதானப் பிரதேசம் ஒன்றை அமைப்பதை சீனப் பிரதமர் சூ-என்-லாய் தனது புதுடில்லி பேச்சுகளின்போது ஆதரித்தார் என்று தெரிகிறது. பண்டித நேரு இச்செய்தியை இலங்கைக்குத் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

★

ஜார்ஜ்டவுன் :

பிரிட்டிஷ் கயானாவின் கவர்னர், கயானா மக்கள் கட்சித் தலைவர்கள் அனைவரையும் உடனே கைது செய்ய வேண்டுமென உத்திரவு பிறப்பித்துள்ளார் என்று கயானா மக்கள் கட்சி சுற்றறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

★

நைரோபி :

இந்தியப் பத்திரிகையான 'கெட்டி கிரானிகல்' ஆசிரியர் பின்டோ கைது செய்யப்பட்டதை யொட்டி, கென்யாவில் ஏராளமான இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர் என்று வெளியான செய்தியை கென்யா சர்க்கார் மறுத்துள்ளது.

★

அக்ரா :

தோகோலாந்து மக்கள், கோல்டுகோஸ்ட்டுடன் இணைவதை ஆதரிக்கிறார்களா, அல்லது பிரான்சுடன் சேர விரும்புகிறார்களா என்பதை அறிய பொதுஜன வாக்கெடுப்பு வேண்டுமென்று ஐ. நா. தர்மகர்த்தா சபையை தோகோலாந்து காங்கிரஸ் தலைவர்கள் கோருகின்றனர்.

★

வியன்னா :

ஹங்கேரியும், இந்தோனேஷியாவும் வியாபார ஒப்பந்தம் செய்துகொண்டன. இதன்படி, ஹங்கேரி இயந்திரம், மருந்து வகைகள் போன்ற பொருள்களை இந்தோனேஷியாவுக்கும், ரப்பர், காபி, மிளகாய் போன்றவைகளை இந்தோனேஷியா ஹங்கேரிக்கும் அனுப்புமென்று தெரிகிறது.

★

சைகோன் :

பிரெஞ்சுக் குருப்புகள் தெற்கு அம்மான் மலைப்பகுதியான 'அன்க்கி' என்னும் முக்கியமான இடத்தைக் காலி செய்துவிட்டன என்று தெரிகிறது. பிரெஞ்சுக்காரர்கள் இப்பிரதேசத்தை மிகவும் முக்கியமான இடமென்று கருதி பாதுகாத்து வந்தனர்.

★

லண்டன் :

ரோடீஷியாவுக்கும், நியாசலாந்துக்கும் பத்து மில்லியன் டாலர்களை அமெரிக்கா கடனுதவி தருவதென்று ஒப்பந்தம் ஒன்று லண்டனில் கையெழுத்தாயிற்று. இதன் மூலம் ரோடீஷியாவிலும், நியாசலாந்திலும் ரயில்வே அபிவிருத்தி ஏற்படுமென்று தெரிகிறது.

★

வாஷிங்டன் :

வின்ஸ்டன் சர்ச்சிலும், அந்தோனி ஈடனும் வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதியுடன் தங்கள் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு ஒட்டாவா சென்றனர்.

* * *

ஆசியக் கம்யூனிஸ்டுகளுடன், அங்கீகரிப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளும் நாடுகளுக்கு தென் கிழக்கு ஆசிய ராணுவ ஒப்பந்த உதவியை அளிக்கக்கூடாது என்று அமெரிக்க மக்கள் சபையின் வெளிவிவகார கமிட்டி தீர்மானித்தது.

டோக்கியோ :

அண்மையில், டோக்கியோ சென்றிருந்த அம்பாலால்பட்டேல் என்ற இந்திய திரைப்பட உற்பத்தியாளர் இந்தியாவில், சரித்திர, புராணப் படங்களைக் காட்டிலும், அன்றாட வாழ்க்கையைக் காட்டும் இந்தியப் படங்களுக்கே வெளிநாடுகளில் மதிப்பும், விற்பனையும் அதிகமாக உள்ளதென்று கூறினார்.

கழகக் கூட்டம்

★

சிவாயம்

தி. மு. க. துவக்க விழா

2—7—54 மாலை 4 மணிக்கு

தலைவர் : ஆர். பாலகுருசாமி

கொடியேற்றுபவர் : தில்லை-வில்லாளன்

பேசுவோர் : சி. பி. சிற்றரசு, ஏ கோவிந்தசாமி, எம் எல். ஏ.

சொற் பயிற்சிக் கூட்டம்

2—7—54 மாலை 6 மணிக்கு வடசென்னை வியாசாயர் பகுத்தறிவு மன்றத்தில் தோழர் மு. மதிவாணன் தலைமையில், 'வறுமையும்-செல்வமும்' எனும் பொருள் பற்றி நடைபெறும்.

தூத்துக்குடி எஸ். நடராசன் சுற்றுப் பிரயாணம்

★

ஜூலை 4:	விருதுநகர்
5:	ஸ்ரீவைகுண்டம்
6:	மங்கலக்குறிச்சி
7:	ஏரல்
8:	தென்திருப்பேரை
9:	திருச்செந்தூர்
10:	அம்மன்புரம்
11:	நாசரேத்

ஆலிசேக் மன்சூர் சுற்றுப்பயணம்

★

ஜூலை 4:	விக்கிரமசிங்கபுரம்
12:	மாவடி:
13:	இராஜசிங்கமங்கலம்
15:	வாசுதேவநல்லூர்
17:	மறுகால்குறிச்சி

தேர்தல் கலவரம் 7 பேர் பலி

லாகூர் அருகே சம்பவம்

லாகூர், ஜூன் 29—

ஜில்லா போர்டு தேர்தல் ஒன்றில் இருதரப்பினரிடையே கலவரம் நடைபெற்று ஏழு பேர் மரணமடைந்ததாகவும், ஏராளமானவர்கள் காயமுற்றதாகவும் தெரிகிறது.

ராவல்பிண்டிக்கு பதினெட்டு மைல் தூரத்தில் உள்ள 'கிர்ப்பா' என்னுமிடத்தில், 'ஓட்' போடுமிடத்தில், ஒரு வாக்காளருடைய தகுதி இருதரப்பினரிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டதாம்.

இந்த வேற்றுமை முற்றி, பின்னர் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அடித்துக் கொண்டார்கள்; கைவெடி குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிகிறது.

மரணமடைந்தவர்களில் மூன்று பேருடைய பிணங்களைப் போலீசார் எடுத்தனர் என்றும், மற்ற பிணங்களைக் கலகக்காரர்களே தூக்கிச் சென்றனர் என்றும் தெரிகிறது.

டாக்டர்கள் சத்தியாக்கிரகம்

போலீசார் தலையிட்டு கலைத்தனர்

டோக்கியோ, ஜூன் 28—

ஜப்பானிய சுகாதார அமைச்சர் காரியாலயத்தின் முன்னுள் ஜப்பான் மருத்துவக் கழகங்களின் பிரதிநிதிகளான 100 டாக்டர்கள் கீழே உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர்.

இந்த டாக்டர்கள் ஜூன் 21-ந் தேதியிலிருந்து சர்க்கார், டாக்டர்களுக்கான இன்ஷூரன்ஸ் பரிசோதனைக் கட்டணத்தைக் குறைத்ததை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்கின்றனர்.

சத்தியாக்கிரகிகள் உட்கார அமைத்துக் கொண்டிருந்த கூடாரமொன்றை மந்திரி சபை பாதுகாப்பு சிப்பாய்கள் கலைத்துவிட்டனர்.

பின்னர் போலீசார் சென்று டாக்டர்களைக் கலைந்துபோகுமாறும், இல்லையேல் பலாத்கார முறைகள் மூலம் அவர்கள் கலைக்கப்படுவார்கள் என்றும் கூறினர். உடனே டாக்டர்கள் கலைந்து சென்றனர்.

வேலூர் மாநாட்டில் ஈழத்தடிகள் தலைமை உரை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பேதங்களை ஒழித்து, மக்களை வரையும் சரிநிகர் சமானமாக்கும் ஒப்பற்ற பணியினை செய்து வரும் பகுத்தறிவுவாதிகளே ஒழிய, நாத்திகர்களல்ல என்பதை நம்மைப் பற்றித் தவறுதல்களைக்கூறப் போட்டுக்கொண்டு நாவசைக்கும் கம்யூனிஸ்டு நண்பர்கள் உணர வேண்டுகிறேன்.

ஒரு உண்மையான பகுத்தறிவுவாதி, ஒருபோதும் தன்னை நாத்திகன் என்று சொல்லிக்கொள்ளவே மாட்டான்; அப்படிச் சொல்லிக் கொண்டால், அவனுக்குப் 'பகுத்தறிவுவாதி' என்று பெயர் பொருந்தாது.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற அடிப்படையை வைத்து எதையும் ஆராய்ந்து செய்பவர்கள் நாமாவோமே, நாம் எப்படி நம்மை நாத்திகர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும்? இன்று நாட்டில் நடைமுறையில் காணப்படும் கடவுளும், மதமும், அவற்றிற்கு வகுக்கப்பட்டுள்ள இலக்கணங்களும் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையா? ஒத்து வருமா? என்று ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியின் பயனாக இப்படிப்பட்ட கடவுளும், மதமும் நமக்குத் தேவையில்லை என்று கூறுகிறோம்.

மக்கள் சமுதாயத்தின் எந்தப் பகுதியிலும் ஆகாயத்தில் தன் ஆதிக்கத்தைச் செலுத்தாத—செலுத்த விரும்பாத ஒரு கடவுள் இக்காட்டில் இருப்பானானால் அவனை நாம் ஆட்சேபிக்கவில்லை; மறுக்கவில்லை; நாம் நாத்திகர்கள் அல்ல என்று கூறுகிறோம்.

நாம் நாத்திகர்களுமல்ல; ஆத்திகர்களுமல்ல—பகுத்தறிவுவாதிகள். அறிவுக்குப் பொருந்தும் எந்த செயலும் நடந்தாலும், அதற்கு ஆதரவு தருகிறோம்; அந்தச் செயலை நாம் மேற்கொள்கிறோம். நாட்டுக்குச் சரிவரப்பட்ட ஒன்று, மற்றவர்களுக்குத் தடையாகப் படுவதைக் காணும்பொழுது நாம் அதைப்பற்றிச் சிந்திக்கிறோம்; சிந்திக்கும் அவைகளை மற்றவர்களுக்கும் அளிக்கிறோம். அதனால், நாம் யாரையும் ஒருவரின் விருப்பத்திற்கு மாறாக வலுக்கட்டாயமாக ஏற்கும் வண்ணம் பிறகு—மற்றவர்களை நிர்ப்பந்தித்து ஏற்றுக்கொள்ளும்படி செய்வதுமில்லை.

இந்த அடிப்படையில்தான், நாம் நம்முடைய பகுத்தறிவுப் பணியினை செய்து வருகிறோமே ஒழிய, நாம் நாத்திகர்கள் என்று கூறிக்கொண்டோ ஆத்திகர்கள் என்று கூறிக்கொண்டோ எந்தக் காரியத்தையும் செய்ததில்லை — செய்யவும் மாட்டோம் அது நமக்குப் பழக்கமுமில்லை — பழக்கப்படவுமில்லை.

சில சந்தர்ப்பவாதிகளைப் போல சமயம் நேரும்போது ஒருவரைப் புகழ்வதும், மற்றொரு சமயம் அவரையே இகழ்ந்து பேசுவதுமான இழி தன்மையை நாம் எப்பொழுதுமே மேற்கொண்டதில்லை.

நம்பனைப் புகழும்போது, வெல்லியைக் கம்பனின் காலடிக்குச் சமமாக்குவதும், வெல்லியைப் புகழும் வாய்ப்பு நேரிடும்போது, கம்பனைக் கண்டுக்கொள்ளாத தூரத்தில் நிறுத்தி வைப்பதுமான நேர்மையற்ற செயலை நாம் எப்பொழுதுமே மேற்கொண்டதில்லை; மேற்கொள்ளமாட்டோம். அது பொதுவுடைமையின் பொருளறியாத புல்லர்களின் வேலை.

கம்பன், நாட்டுக்கு ஏதாவது நல்ல காரியம் செய்திருந்தால (செய்யவில்லை) அவன் செய்த அளவுக்கு அவனைப் புகழ நாம் தயங்கமாட்டோம்.

ஷெல்லி, நாட்டுக்குத் தேவையான நல்ல காரியத்தைச் செய்திருந்தால், அவன் செய்த காரியத்தையும் பாராட்டவே செய்வோம்.

சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு சறுக்கி விழுவதும், விழுந்த பின் 'மீசையில் மண் ஒட்டவில்லை' என்று கூறிக் குட்டிக்கரணம் போடுவதும் பொதுவாழ்வில் நாணயமாகாது, நமக்குப் பழக்கமில்லாத ஒன்றாகும்.

சமுதாயத் துறையிலேயும் சரி, அரசியல் துறையிலேயும் சரி, எந்த நல்ல காரியம் யாரால் செய்யப்பட்டபோதிலும், செய்தவரை மனதில் கொள்ளாமல, செய்யப்பட்ட செயலின் தன்மையைக் கொண்டே அதனை செய்து முடித்தவரை பாராட்டுவோம்—பாராட்டியிருக்கிறோம்.

சமுதாயத் துறையிலே புரட்சிகரமான மாறுதல்களைச் செய்த இராஜாராம் மோகன் ராய், கமால் பாட்சா, சன்யாட்சன் ஆகியோரைப் பாராட்ட நாம் தயங்கியதில்லை.

அதேபோல, அரசியல் துறையிலே நாட்டுக்கு நல்ல காரியம் செய்யும்போது, யாராயிருந்தாலும் அவர்களைப் பாராட்டத் தவறியதில்லை.

தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கோயில் நுழைவு, இருதார மணத் தடை, பெண்களுக்குச் சொத்துரிமை போன்ற நாட்டுக்குத் தேவையான நல்ல காரியங்களை நமக்கு எதிர்க் கட்சியினராயுள்ள காங்கிரஸ்காரர்கள் செய்தபோது நாம் அவர்களைப் பாராட்டியிருக்கிறோம்.

அதேசமயத்தில், வேண்டாத புதுப் புது வரிகள் போடும்போதும், தேவையில்லாத திட்டங்களை வகுக்கும்போதும் நாம் அவர்களை எதிர்த்திருக்கிறோம்—எதிர்ப்போம்.

இப்படியில்லாமல், யார் ஆட்சிக்கு வந்தபோதிலும், யார் சமுதாயத் துறையில் எந்த நல்ல காரியத்தைச் செய்தபோதிலும் 'அவர்கள் நம்முடைய கட்சி ஆட்களா? அப்படியானால், அவர்களை ஆதரியுங்கள்; இல்லையானால் பகிஷ்கரியுங்கள்' என்ற போக்கில் நடந்து கொள்ளும் குறைமதியை நாம் என்றுமே பெற்றதில்லை—இனியும் பெறமாட்டோம்.

இன்று, நம்முடைய நாடு அடைந்துள்ள சீர்கேட்டினைக் கவனித்துப் பார்க்கும்பொழுது, நாட்டுக்குச் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களை இவை இவை என்று எடுத்துக்கூற நாளும், பொழுதும் போதாது. நாளடைவில் சிறிது சிறிதாகவே நம்முடைய பொறுமையை இழக்காமல் கூறி விளக்க வேண்டிய பல பிரச்னைகள் உள்ளன.

இங்கே நாம் சீர்திருத்தப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கும் இதே நேரத்தில்தான், திருப்பதி ஏழுமலையானுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 'வைகுண்ட ஹஸ்தம்' என்ற பெயரால் ஒரு ஆபரணம் செய்து அலங்கரிக்கிறார்கள்.

நோய் வராமல் தடுக்க கடவுளால் முடியாது; மருந்துகளுக்குத்தான் முடியும் என்று பிரச்சாரம் செய்து கொண்டிருக்கும் இதே நேரத்தில்தான், வேறொரு திசையில், நோய் வராமல் தடுக்க, நிர்வாணப் பெண்கள், மயானத்தில் நின்றுகொண்டு யமனை நோக்கி பூஜை செய்கிறார்களாம். இப்படியொரு சம்பவம் ஜோத்பூர் என்ற கிராமத்தில் 6—6—54-ல் நடைபெற்றதாகப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

அது மட்டுமல்ல—'சமூக நீதி மனப்பான்மை கூடாது. அது சுதந்திர இந்தியாவுக்கே ஆபத்து'-என்று நம்முடைய சர்க்காரின் பேசுவதுபோல், இப்பணியை அவனி முழுவதும் பணியாகச் செய்வதால் மட்டுமே நாடு முன்னேற்றமடைய முடியும்,'— என்ற முறையில் பணியாற்றி வரும் நண்பர் பி. டி. இராஜன் கூறுகிறார்.

'ஆண்டவன் பேரால் அநேக [illegible] செய்யப்படுகின்றன—[illegible] சீர்திருத்தப் பிரச்சாரத்தைச் செய்துகொண்டிருக்கும் இதே சமயத்தில்தான் 'கிரிக்கெட்' பிடிப்பதற்கு மட்டும் 33 கோடி ரூபாய் செலவு செய்யும் மக்கள், கடவுளுக்கு ஏதும் செய்யவில்லையே என்ற கவலையைத் தெரிவிக்கிறார்கள்.

ஆரியர் வேறு — திராவிடர் வேறு என்று தக்க ஆதாரங்கள் எடுத்துக் காட்டி, திராவிடர்களாகிய நாம், எல்லாத் துறையிலும் தனியிடம் பெறவேண்டுமெனப் போராடிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில்தான், 'ஆரியனாவது தமிழனாவது, திராவிடனாவது, அதெல்லாம் ஒன்றுமில்லை,' என எக்காளக் குரல் எழுப்பும் அரசியல் அஞ்ஞானிகள் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆகவே, சீர்திருத்தவாதிகளாகிய நாம் எவ்வளவு முயன்று எவ்வளவு நல்ல காரியங்களை நாட்டுக்கு செய்துகொண்டு வந்தபோதிலும் அவற்றையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாமல்—காதில் போட்டுக்கொள்ள விரும்பாமல் நம்முடைய சீர்திருத்தத்துக்கு எதிரான காரியங்களை இன்னும் சிலர் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

இவற்றைக் கண்டு நாம் சலிப்படைந்துவிடாமல், இப்போது செய்து வருவதைக் காட்டிலும் தீவிரமாகவும், உற்சாகமாகவும், உள்ளம் தளர்ந்து விடாமலும் பகுத்தறிவுப் பாதையினை செப்பனிடும் பணியில் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, இந்தச் சீர்திருத்த மாநாட்டிற்கு தலைமை தாங்கும் வாய்ப்பினை தந்த வரவேற்புக் குழுவினருக்கு மீண்டும் எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்."

'அறிவினுள் ஆருவது உண்டோ பிறிதின் நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை....''

[illegible] நம் நாடு [illegible] ஆசிரியர் : இ. என். அண்ணாதுரை, எம். ஏ.